சார்பு நீதிமன்றம், குளித்தலை
OS.No. **153 / 2016**

பெயர்: கோபால் பி.வா.சா. 1 தேதி **05.06.2024**

**த/பெ. மாரியப்பன்**

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் வாதி சாந்தி என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ற முழுவிவரத்தையும் தெரிந்துக்கொண்டு தான் நா்ன் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இதே வழக்கின் வாதி பாக பிரிவினை பரிகாரம் கோரி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 84/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கின் இரு தரப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குள் சமரசம் பேசியதன் அடிப்படையில் மேற்கண்ட வழக்கு அந்த வழக்கின் வாதியான சாந்தியால் வாபஸ் பெறப்பட்டது என்ற விவரத்தை உள்ளகளது எதிர் வழக்குரையில் எந்த ஒரு இடத்திலாவது சொல்லி இருக்கிறேர்களா என்றால் இல்லை. சாட்சி தானாக முன்வந்து அந்த வழக்கில் சமரசம் செய்யவில்லை அந்த வழக்கின் வாதியான சாந்தி தான் தானாகவே வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார் என கூறினார். மேற்கண்ட வழக்கின் வாதி சாந்தி தானாகவே வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார் என்ற விவரத்தை எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது இந்த வழக்கிற்கு தேவைப்படாது என்பதால் சொல்லவில்லை,. மேற்கண்ட வழக்கு நடைபெற்ற காலத்தில் எனது தாயார் உயிருடன் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும்பொழுது மேற்கண்ட வழக்கை சாந்தி வாபஸ் பெற்றுக்கொண்டதற்கு பிறகு எங்களது குடும்ப உறுப்பினர்களுக்குள் எந்தெந்த சொத்துக்களை யார் யார் அடைய வேண்டும் என்பதை பொறுத்து குடும்ப ஏற்பாடு ஒன்று எழுதப்பட்டது அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி அப்படி ஒன்று நடக்கவே இல்லை என்று கூறிவிட்டு மீண்டும் தனக்கு அது பற்றி தெரியாது என்று கூறினார். பட்டன் செட்டியார் என்ப்வருக்கு பாத்தியப்பட்டது தான் இந்த வழக்கில் உள்ள ஏ செட்டியூல்டு சொந்து என்றால் சரிதான். அதே பொறுத்து மாரியப்பன் செட்டியாருக்கு 1974 ம் வருடம் ஏ செட்டியூல்டு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1974 ம் ஆண்டு மாரியப்பன் செட்டியருக்கு மேற்கண்ட சொத்து ஒதுக்கப்பட்டபோது வாதி பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் அனைவரும் மைனர் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் தான் மேற்கண்ட மாரியப்பன் செட்டியார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் வருமான வரி செலுத்தினாரா என்ற விவரம் எனக்கு செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியும். மேற்கண்ட சொத்து எனது தகப்பனாருக்கு கிடைத்ததற்கு பிறகு 1974 ம் ஆண்டில் இருந்து எனது தகப்பனார் வருமான வரி செலுத்தினாரா என்றால் செலுத்தினார். 1974 ம்

ஆண்டில் இருந்து மேற்கண்ட சொத்தில் கிடைத்த வருமானத்தில் வருமான வரி செலுத்திருக்கிறாரா என்று சொன்னால் இல்லை என்று சாட்சி முதலில் கூறிவிட்டு மீண்டும் அந்த சொத்தில் எந்த வருமானமும் கிடைக்கவில்லை என்று கூறினார். இந்த வழக்கின் 5ம் பிரதிவாதியான மருதை எனது எதிர் வழக்குரையில் என்ன சொல்லிருந்தார் என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டு தான் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்தேனா என்றால் அவர் என்ன பதில் போட்டுயிருக்கிறார் என்று தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தை எனக்காக மட்டும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை எனது குடும்பத்தில் உள்ள 5 உறுப்பினர்களுக்காகவும் தாக்கல் செய்திருக்கிறேன். இன்று நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள விவரம் அந்த மற்ற பிரதிவாதிகளுக்கும் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் 2,4,7,12,14ம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் எப்போதும் ஆஜராகவில்லை என்றால் சரிதான். எனது தாய் மற்றும் தந்தையார் என்ன படித்துள்ளார்கள் என்றால் எனது தகப்பனார் எஸ்.எஸ் எல்.சி படித்திருக்கிறார் எனது தாயார் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன் சரியாக ஞாபகம் இல்லை. நான் திருச்சிராப்பள்ளி கோட்டை சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளேன். அதில் எனது தாயார் படிப்பறிவு இல்லாதவர் என்று சொல்லிருக்கிறேன் என்றால் எனது தாயாரை பற்றி படிப்பறிவு இல்லாதவர் என்று விவரம் கொடுத்ததாக ஞாபகம் இல்லை. எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.வா.சா.5 ஆணத்தில் முதல் பத்தியில் M. பாப்பம்மாள் என்று தான் எனது தாயார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியிடம் மேற்கண்ட ஆவணத்தை காட்டிக்கேட்கப்பட்டது சாட்சி அதனை பார்த்து ஆமாம் என்று கூறினார்.எனது தாயாரின் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்திலும் M. பாப்பம்மாள் என்ற பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் வருமான வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை வருமான வரி செலுத்தியுள்ளார்கள் என்றால் வருமான வரி செலுத்தியுள்ளார்கள் ஆனால் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் என ஞாபகம் இல்லை. சுமார் 20 வருடங்களுக்கு வருமான வரி செலுத்திருப்பார் என்றால் சரிதான். எனது தாயார் அந்த காலத்து 8ம் வகுப்பு படித்தவர் என்பதால் அவருக்கு ஆங்கிலமும் ஓரளவு எழுத படிக்க தெரியும் அவர் கையெழுத்தும் செய்வார் என்றால் அவர் தமிழ் அறிவு மட்டும் தான் இருந்தது. நான் கூறியுள்ளது போல் 8ம் வகுப்பு வரை எனது தாயார் படித்திருந்தார்கள் என்றால் பி.வா.சா.5 ஆவணத்தில் அவருடைய கையெழுத்தை பாப்ப அம்மாள் என்று கையொப்பம் செய்திருக்க மாட்டார். என்றால் அவர்கள் அது மாதிரி தான் கையெழுத்துப்போடுவார்கள். மேற்கண்ட கையெழுத்தை பார்க்கும் பொழுது எழுத படிக்க தெரியாதவர்கள் போட்ட கையெழுத்து போல் தெரிகிறது என்றால் அவர்கள் அவ்வாறு போட்டிருக்கிறார்கள் எனக்கு அது பற்றி தெரியாது. பி.வா.சா.5 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்துப்போட்டிருக்கிறார்கள் என்றால் குருமூர்த்தி,

நடராஜன் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். மேற்கண்ட சாட்சிகள் இருவரும் எங்களது குடும்ப உறுப்பினர்கள் இல்லாத வெளி நபர்கள் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா 5 ஆவணத்தில் நான் எனது தாயாரை நல்ல முறையில் பார்த்துக்கொண்டேன் என்று வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது குடும்ப அட்டையில் எனது தாயார் பெயர் இல்லை என்றால் சரிதான் அவருக்கு வேறு குடும்ப அட்டை உள்ளது. எனது தாயார் திருச்சிராப்பள்ளி பாபு ரோடு என்ற விலாசத்தில் தனியாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்ததற்கு பிறகு எனது தாயாருடன் தான் நான் இருந்தேன். எனது குடும்ப அட்டை எந்த விலாசத்தில் உள்ளது என்றால் 15 பாபு ரோடு திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்தில் உள்ளது. இந்த வழக்கில் எனது எதிர் உறையிலோ எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலோ நானும் எனது தாயாரும் ஒரே இடத்தில் தான் வசித்து வந்தோம் என்ற விவரத்தையோ, எனது தாயாரை நான் தான் பராமரித்து வந்தோன் என்ற விவரத்தையோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட விவரத்தை பற்றி நான் சொல்லவில்லை என்பதால் தான் தற்போது ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் திருச்சிராப்பள்ளி ஜி.வி.என் மருத்துவமனையில் உடல் நிலை சரியில்லாமல் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் இல்லை. எனது தாயாருக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மருத்துவமனைக்கு சென்று பார்ப்பார்கள் என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது இல்லை அவருக்கு தலைவலி,காய்ச்சல் தான் வரும். எனது தாயாருக்கு சர்க்கரை நோய் உள்ளது என்றால் சரிதான். சர்க்கரை நோய்க்கு ஜி.வி.என் மருத்துவமனையில் டாக்டர் கனகராஜ் என்பவரிடம் எனது தாயார் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் எடுத்திருக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. உண்மையாகவே நான் எனது தாயாருக்கு நல்ல மகனாக இருந்திருந்தாலோ எனது தாயாரை என் உடனே வைத்து பராமரித்திருந்தலோ அவருக்கு என்னென்ன நோய் இருந்தது அதற்கு அவர் எங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்கிற விவரம் தெரிந்திருக்கும் எனது சாட்சியத்தில் இருந்தே நான் எனது தாயார் உடன் இல்லை என்பதும் அவரை நான் பராமரிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட பி.வா.சா.5 ஆவணமானது மோசடியாக என்னாலேயே தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.5 ஆவணம் 2,4,7,12 மற்றும் 14 ம் பிரதிவாதிகள் ஆகியோருக்கு தெரியாமலே நானாகவே தயாரித்துக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்த வருடமான 2019 ம் ஆண்டு தான் பி.வா.சா.5 ஆவணமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு வரை எனது தாயார் வருமான வரி செலுத்தி வந்தார்களா என்றால் இல்லை. எனது தாயார் எத்தனை ஆண்டு காலம் எனது பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் 8 ஆண்டு காலம் இருந்து வந்தார். அந்த காலகட்டத்திற்கு எனது தாயார் வருமான வரி செலுத்தினார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பொதுவாக எனது தாயார் எந்த விசயம் செய்தாலும் என்னிடம் சொல்லுவார்களா என்றால் எனது தாயார் தனது மகன்களான

அனைவரிடம் சொல்லுவார். சாட்சி எல்லா விவரத்தையும் சொல்லமாட்டார் முக்கியமான விவரத்தை மட்டும் சொல்லுவார் என மீண்டும் கூறினார். சாந்தி தாக்கல் செய்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டதற்கு எனது தாயார் ஒரு குடும்ப ஏற்பாட்டை செய்திருந்தார் என்ற விவரத்தை முழுமையாக தெரிந்துக்கொண்டதற்கு பிறகு அனைத்து சொத்துக்களையும் நானே அடைய வேண்டும் என்பதற்காக மோசடியான ஆவணங்களை தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு எனது தாயார் இறப்பதற்கு முன்பு சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி ஜி.வி.என் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்ற விவரம் நன்றாக தெரிந்தும் தற்போது இந்த வழக்கிற்காக எனக்கு ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தாயார் மேற்கண்ட வடிவேலுடன் சில காலம் இருந்தார் என்று சொன்னால் சரிதான். எவ்வளவு காலங்கள் எனது தாயார் வடிவேலுடன் இருந்தார் என்றால் வடிவேலுதான் எனது தாயார் வீட்டிற்கு வருவார் போவார். வடிவேல் எனது தாயாரை நல்ல முறையில் பார்த்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான். 2018ம் ஆண்டு வரை பார்த்துக்கொண்டார். வடிவேல் 2018 ஆண்டு வரை தான் ஒருவர் மட்டும் தனது தாயாரை பராமரித்து வந்தார் என்றால் இல்லை எனது தாயார் வீட்டிற்கு வருவார் போவார். வடிவேலும் எனது தாயாரும் ஒரே வீட்டில் ஒன்றாக இருந்தார்களா என்றால் இல்லை எனது தாயார் தனியாக தான் இருந்தார் நாங்கள் அனைவருமே தனியாக தான் இருந்தோம். அந்த கால கட்டத்திலேயே உயில் மூலமாக அனைவருக்கு தனித்தனியாக சொத்து பிரித்துக்கொடுக்கப்பட்டது. 2018ம் ஆண்டு எனது தாயார் தனித்தனியாக சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டார் என்ற விவரத்தை எனது எதிர் வழக்குரையிலோ, சத்திய பிரமாண வாக்குமூலத்திலேயோ சொல்ல வில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் முதலில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 2018ம் ஆண்டு எனது தாயார் தனித்தனியாக சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் எதியுரையை எனது தாயார் தான் தாக்கல் செய்தார் அதனால் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதே போல் நான் தற்போது தாக்கல் செய்துள்ள எனது சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் மேற்கண்ட விவரங்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். பி.வா.சா 5 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள குருமூர்த்தி மற்றும் நடராஜன் ஆகியோர் பத்திர பதிவு அலுவலகத்திற்கு முன்பு அமர்ந்திருந்து கையெழுத்து போடும் நபர்கள் என்று சொன்னால் சரிதான் என்று கூறிவிட்டு சாட்சி மீண்டும் ரிசிஸ்டர் ஆப்பிஸ்ற்கு வந்த சாட்சி கையெழுத்து போட்டார்களா என்று கேள்வி கேட்டதாக நினைத்துக்கொண்டு மேற்கண்ட பதிலை கூறிவிட்டதாகவும் மேற்கண்ட சாட்சிகள் நகை கடைகாரர் மற்றும் பிளம்பர் என்று தானாக முன்வந்து சாட்சியம் அளித்தார்.

கடந்த ஒரு மணி நேரம் காலமாக மின் இனைப்பு துண்டிக்கப்பட்டு விட்டதாலும் ஜெனரேட்டார் டீசல் இல்லாமல் நின்று விட்டதாலும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/- கோபால்

ஓம்/ M.பாக்கியம்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.